திருவெளிச்சை ஸ்ரீபசுபதீச்சுவரர் மற்றும் சுந்தர வரதராஜ பெருமாள் திருக்கோயிலின்

## ஸ்தல புராணம்

ஆதியில் தத்தாத்ரேயராக, பின் உக்கிர பாண்டியனாக, ஆனாய நாயனாராக, வில்வமங்கள சுவாமிகளாக, அபிராமி பட்டராக பிறவிகள் எடுத்த ஞானிகள் 18ஆம் நூற்றாண்டில் சதாசிவ பிரும்மேந்திரராக அவதரித்தார்.

ஜாதி, மத, சம்பிரதாயங்களைக் கடந்து "சர்வம் பிரும்ம மயம்" என்று சிவாம்சமாக விளங்கிக் கொண்டிருந்தவரை அவரின் குருநாதராக விளங்கிய அன்றைய காஞ்சி சங்கராச்சாரியரான பரமசிவேந்திர சங்கரர் மௌனம் கடைபிடிக்கும்படி கட்டளையிட்டார். அதிலிருந்து ஜீவசமாதி அடையும்வரை அவதூதராக மௌனியாகவே இருந்தார் ஞானிகள். தாம் விட்ட இறை பணியை தொடர 20ஆம் நூற்றாண்டிலே கிருஷ்ணசாமி, ருக்மணி தம்பதிகளுக்கு மகனாக பிறந்தார். இளம் வயதிலேயே ஞானிகள் ஸ்ரீராம பிரானின் பட்டாபிஷேகக் காட்சியும், சோமாஸ்கந்தரின் திருவுருவ காட்சியும் தெரிகிறது எனத் தந்தையிடம் கூறுவார். சந்தோஷமும் பயமும் அடைந்த ஞானிகளின் தந்தையார் ஞானிகளை காஞ்சி பரமாச்சாரியராக இருந்த ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சுவாமிகளிடம் அழைத்து சென்றார். சில மாதங்கள் பெரியவருடன் தங்கினார் ஞானிகள். கடைசியில் மஹாபெரியவர் ஞானிகளின் தந்தையிடம் "அவன் இறைவனின், காஞ்சி வரதராஜ பெருமாளின் பூரண அருளைப் பெற்றவன். அவனை அவன் போக்கிலேயே விட்டு விடு" என்று கூறி ஆசி வழங்கினார்.

சிறு வயதில் அவர் பிறந்த பாகவதபுரத்தில் உள்ள கோயிலில் உள்ள தெய்வங்களுக்கு சிறிய இறைபணி செய்து கொண்டு வந்தார். தானும் அக்கோயிலைப் போல ஒரு ஆலயம் தன் வழிபாட்டிற்கு கட்ட வேண்டும் என்று எண்ணியது குழந்தை உள்ளம். காலம் வரும்போது நானே அதற்கு வழி செய்கிறேன் என்று வரம் அருளிய இறைவன் உருவாக்கித் தந்ததுதான் இக்கோயிலின் ஸ்தலபுராணம்.

அன்பர்கள் அமைதியும், சந்தோஷமும் அடைந்து குறையிலா பெருவாழ்வு வாழ ஒவ்வொரு சந்நிதியிலும் ஞானிகள் இறைவனை துதித்து பாமாலைகள் பாடுகிறார். இறைவனின் ஆணைக்குட்பட்டு மக்களின் குறைகளை அகற்ற ஞானிகள் தாம் அமைத்த கோயில் வளாகத்தில் அருள்மிகு மகா ப்ரத்யங்கரா தேவிக்கு புதிய ஆலயம் அமைத்து அதை இக்கோயிலின் எல்லைக்கோயிலாக அமைத்துள்ளார்.

ஞானிகளின் குலதெய்வமான அருள்மிகு ஸ்ரீராமசந்திர மூர்த்திக்கும், சிறிய திருவடியான அருள்மிகு ஸ்ரீஆஞ்சநேய ஸ்வாமிக்கும் ஞானிகள் கோயில் எடுத்துள்ளார்கள்.

ஞானிகள் அருளிய

## ஞானச்சேரி

18ம் நூற்றாண்டில் பிரும்மஞானியாக அவதூதராக தமிழ் நாட்டில் இறைபணியே தன் மூச்சாகக் கொண்டு ஜாதி சமய சம்பிரதாயங்களைக் கடந்து சிவாம்சமாக விளங்கிக் கொண்டிருந்தவர் சதாசிவ பிரும்மம். அவரின் குருநாதர் காஞ்சி பரமசிவேந்திர சங்கரரால் பல காரணங்களுக்காக மௌனியாக்கப்பட்டார். நெரூரில் ஜீவசமாதி அடைந்த பிரும்மம் விட்ட பணியைத் தொடர 20ம் நூற்றாண்டில் திரு.கிருஷ்ணசாமி ருக்மணி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார்.

சிறு வயதிலேயே இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஞானிகளுக்கு பூர்வ ஜென்ம நினைவு ஆண்டவனால் அருளப்பட்டது. சிறு வயதிலேயே பல அற்புதங்களை நிகழ்த்திய ஞானிகள் 1979ல் **ஞானச்சேரி** என்ற அமைப்பை நிறுவி ஞானமழை பொழிந்து இறையுணர்வை மக்களிடம் உணர்த்தி வருகிறார்.

மயிலையில் உள்ள லஸ்ஸில் மிக எளிய முறையில் முருடீஸ் லாட்ஜ் மாடியில் துவங்கிய இவ்வமைப்பு நாளடைவில் வளர்ந்து, இப்பொழுது மந்தைவெளியில் கல்யாண்நகர் அசோசியேஷனில் தன் இறை பணியை செய்து வருகிறது. ஞானிகள் நடத்தும் இறைபணி வேள்வி வித்தியாச மானது. சாதி, சமய, சம்பிரதாயங்களைக் கடந்து பக்தியையும், அன்பையும், கருணையையும் தாரக மந்திரமாக உபதேசிக்கிறார். ஞானிகள் எல்லா மதங்களிலும் உள்ள பழைமையான கருத்துக்களுக்கு புதிய விளக்கம் தந்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்து கிறார்.

சிவராத்திரி, நவராத்திரி, ஞானிகளின் பிறந்தநாள், கிறிஸ்துமஸ், மிலாடி நபி, நபிநாயங்களின் கருத்துக்கள், சீக்கியம், ஜைனம் அனைத்தையும் பற்றி பக்தி பரவசத்துடன் உணர்த்தும் ஞானிகள் பௌத்த சிந்தனைகளுக்கு புதிய வடிவம் கொடுத்தவர்.

**திருபொருட்பா, பகவத்சாரம், இந்தியாவின் ரோஜா மலர்கள்** முதலிய நூறுக்கும் மேற்பட்ட ஏராளமான நூல்களின் வழியாக கருத்து பொக்கிஷங்களை வழங்கியுள்ளார்கள். **"ஞானச்சேரி"** என்ற மாதாந்திர இதழ்கள் வழி பக்தியை பரப்பி வருகிறார்.

அருள்மிகு ஸ்ரீ பசுபதீஸ்வரர்

ஸ்ரீ சுந்தரவரதராஜ பெருமாள் திருக்கோயில்

# விஸ்வரூப ஸ்ரீ ராம பக்த ஆஞ்சநேயர் கோயில்

திருவெளிச்சை, கேளம்பாக்கம், சென்னை - 603 103

## மஹா சம்ப்ரோக்ஷண விழா அழைப்பிதழ்

**11-09-2011 ஞாயிறு**

**காலை 10.30 மணிக்கு**



முந்தாமலும் ஓடாமலும் வருவான்
ஒருபோதும் நடவான் தாவி தாவியே வருவான்
நின்றாலும் உயர்வான் இருந்தாலும் சீர்
பெறுவான் குன்றாமல் வளர்வான்
குன்றுபோல இருப்பான் – சஞ்சீவியான்

எல்லாம் வல்ல சதாசிவ பிரம்மேந்திரர் அருள் ஆசியுடன், நமது திருவெளிச்சையில் ஸ்ரீசிம்மப்ரியா சமேத ஸ்ரீபசுபதீஸ்வரர், ஸ்ரீகனகவல்லி தாயார், ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீசுந்தரவரதராஜ பெருமாள் திருக்கோயிலில் புதியதாக ஸ்ரீசீதா சமேத ஸ்ரீராமர், ஸ்ரீலக்ஷ்மணமூர்த்திக்கும், விஸ்வரூப ஸ்ரீராம பக்த ஆஞ்சநேய ஸ்வாமிக்கும் நூதன ஆலயம் அமைக்க திருவுள்ளம் பாவித்து அதன்படி திருப்பணிகள் எல்லாம் செவ்வனே நடைபெற்று நிகழும் ஸ்வஸ்தி ஸ்ரீகர வருஷம் ஆவணிமாதம் 25–ம் தேதி (11–09–2011) ஞாயிறு, சுக்ல சதுர்தசி, சதயம் நக்ஷத்ரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 10.30 மணிக்கு மேல் 11.30 மணிக்குள் விருச்சிக லக்னத்தில் மஹா சம்ப்ரோக்ஷணமும், கும்பாபிஷேகமும் நடைபெற உள்ளதால் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு இறை அருளையும் குரு அருளையும் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஞானிகளின் ஆசியுடன் ஆலயங்களுக்கு ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகத்தை சர்வ சாதகர் பூஜ்ய ஸ்ரீ உ.ந. கனகசபை சிவாச்சாரியார், சர்வ சாதகர்கள் ஸ்ரீ P.N. பாலாஜி சிவாச் சாரியார், (பெருநகர்) ஸ்ரீ V.K. ராஜப்பா சிவாச்சாரியார் (உத்திரமேரூர்) ஆகியோர் நிகழ்த்தி வைக்கிறார்கள். ஸ்ரீராம பக்த ஆஞ்சநேயர் திருக்கோயிலை ஸ்ரீ முத்தையா ஸ்தபதி, ஸ்ரீ முத்துக்குமார் ஸ்தபதி இருவரும் நிர்மாணித்து தெய்வப்பணி செய்திருக் கிறார்கள். செப்டம்பர் 8 ஆம் தேதி மாலை 6.00 மணியிலிருந்து செப்டம்பர் 11 ஆம் தேதி வரை நித்திய நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்டபடி விசேஷ பூஜைகள், யாகசாலை பூஜைகள், ஹோமங்கள் தீப ஆராதனைகள் நடைபெறும். பூஜைகளின் போது வேத பாராயணங் களும், நாலாயிர திவ்ய பிரபந்த சேவைகளும், தேவார, திருவாசக பாராயணமும் நடைபெறும். முஹூர்த்தப் பத்திரிக்கையை கண்ணுற்ற ஆஸ்திக அன்பர்கள், தாய்மார்கள், பக்தர்கள் யாவரும் வந்திருந்து கும்பாபிஷேக வைபவங்களை தரிசித்து இறையருளையும், குருவருளையும் பெற ஞானிகளின் பக்தர்கள் அன்புடன் அழைக்கிறோம்.

இங்ஙனம்,

சத்குரு ஸ்ரீசதாசிவ பிரும்மேந்திரர் தமர்
திருத் தொண்டர்கள்

# நிகழ்ச்சி நிரல்

| தமிழ் தேதி | ஆங்கிலத் தேதி | நேரம் | விவரம் |
|---|---|---|---|
| ஆவணி 22 | 08.09.2011 வியாழன் | மாலை 6 மணி முதல் | அனுக்ஞை, விக்னேஸ்வர மாதம் பூஜை, விக்னேஸ்வர அனுக்ஞை, அனுக்ஞை, ஸ்ரீசிம்மப்பிரியா சமேத ஸ்ரீ பசுபதீஸ்வரர் அனுக்ஞை, ஸ்ரீகனகவல்லி தாயார் சமேத ஸ்ரீசுந்தர வரதராஜப் பெருமாள் அனுக்ஞை, ஸ்ரீவள்ளிதேவசேனா சமேத சுப்ரமண்யர் அனுக்ஞை, ஸ்ரீப்ரத்யங்கராதேவி அனுக்ஞை. தீபாராதனை ப்ரஸாதம் வழங்குதல். |
| 23 | 09.09.2011 வெள்ளி | காலை 7.00 மணிக்கு மேல் | ஸ்ரீவிக்னேஸ்வரபூஜை,கணபதிஹோமம்,நவக்கிரக ஹோமம், லக்ஷ்மி ஹோமம், அக்னி சங்கிரஹணம், தீபாரதனை ப்ரஸாதம் வழங்குதல் |
| | | மாலை 5.00 மணிக்கு மேல் | ம்ருத்சங்கிரஹணம் , புதிய ஆலயத்திற்கு வாஸ்து சாந்தி,பிரவேசபலி, ரக்ஷோக்ன ஹோமம், அங்குரார்பணம், ரக்ஷாபந்தனம், கும்பாலங்காரம், கலாகர்ஷணம், முதல்காலயாகபூஜை, ஹோமம், ப்ரஸாதம் வழங்குதல். |
| 24 | 10.09.2011 சனி | காலை 8.30 மணிக்கு மேல் | விசேஷ சந்தி, நூதனபிம்பங்கள் நயனோன் மீலனம், ஜலாதி வாசம், சயனாதிவாசம், 2–வது கால யாகசாலை பூஜை ஹோமம், ப்ரஸாதம் வழங்குதல். பிம்ப ப்ரதிஷ்டை. |
| | | மாலை 6.00க்கு மேல் | விசேஷசந்தி, 3–வது கால யாக சாலை பூஜை ஹோமம், தீபாராதனை , ப்ரஸாதம் வழங்குதல். |
| 25 | 11.09.2011 ஞாயிறு | காலை 7.00 மணிக்கு மேல் | 4–வது கால யாக சாலை பூஜை, நாடிசந்தானம், தத்வார்ச்சனை ஸ்பர்ஸாஹூதி. |
| | | 10.00 | மஹா பூர்ணாஹூதி |
| | | 10.30 | கலசப் புறப்பாடு |
| | | 11.00 | விமானங்கள் மஹா சம்ப்ரோக்ஷணம் |
| | | 11.00 11.30 மணிக்குள் | மூலஸ்தான மஹாசம்ப்ரோக்ஷணம், கும்பாபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, தீர்த்ப்ரஸாத விநியோகம், சர்வஜனதரிசனம். |